# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 166/மா/2023**

**நாள் : 22.06.2023**

திரு. B. சரவணன்,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் - 13, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, தி.நகர், புது தெரு, எண்.1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவரின் 15.05.2023 நாளிட்ட மனு 19.05.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 166/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, தி.நகர், புது தெரு, எண்.1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவரின் 15.05.2023 நாளிட்ட மனுவில்,

> நான் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு 4.2.2023 அன்று மண்டலம் - 13, எண்.115, பெருநகர சென்னை மாநகராட்சி, டாக்டர் முத்துலட்சுமி சாலை, அடையார், சென்னை – 600 020 என்னும் முகவரியில் உள்ள மண்டல அலுவலர் அவர்களிடம் பதிவு அஞ்சல் வழியாக புகார் மனு ஒன்று அனுப்பியிருந்தேன். இன்றுவரை 12.5.2023 வரை எனது புகார் மனு மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. எனது புகார் மனுவிற்கு வரிசை எண். மற்றும் எனது புகார் மனுவை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை கடிதமோ, விசாரணையோ அல்லது எனது செல்போன் எண்ணுக்கு குறுஞ்செய்தியோ அல்லது எனது மனு சம்பந்தமாக எந்த அழைப்பு விசாரணையும் நடைபெறவில்லை. நான் புகார் செய்து அந்த சாலை வழிகாட்டி பலகை இன்னும் அப்படியே சாய்வாக மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. தினம் தினம் விபத்து தொடர்ந்து நடந்துக்கொண்டு இருக்கிறது. எனது புகார் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே நான் மண்டல அலுவலரிடம் இதன் வாயிலாக கூறுவது இனியாவது உயிர்பலி ஏற்படும் முன்பு முன் எச்சரிக்கை எடுங்கள் என்று நான் புகாராக பதிவஞ்சல் மூலம் தெரிவித்தேன். ஆனால் ஏனோ நடவடிக்கை இல்லை. எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கையும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கவேண்டும் என்று பணிவுடன் வேண்டுகிறேன். இத்துடன் நான் மண்டல அலுவலர் அவர்களுக்கு அனுப்பிய புகார் மனுவின் நகல் மனுவை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை நகல் இத்துடன் இணைக்கிறேன். நான் தங்களிடம் கூறிய புகாருக்கு போதுமான ஆதாரம் உள்ளது எனவும்

உறுதிமொழியாக உறுதி கூறுகிறேன். மண்டல அலுவலர் மீதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதும் விசாரணை நடத்தி சட்டப்படி நடவடிக்கை எடுத்திட வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். இதற்கான நீதிமன்ற வில்லை ரூ.10/- ஒட்டியுள்ளேன் என தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 12.6.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலர்-13 அவர்களிடம் கோரப்பட்டது. அவர் தனது 16.06.2023 நாளிட்ட அறிக்கையில்:–

மனுதாரர் திரு. பி. சரவணன் அவர்களின் புகாரில் குறிப்பிடப்பட்ட மைய தடுப்பு எச்சரிக்கை பலகை 3 அடி உயரமுள்ள பலகை, வாகன மோதலின் காரணமாக சிறிது சாய்ந்து இருந்ததையும் நல்ல அஸ்திவாரம் கொண்டு பெயர்ந்து விடாமல் இருந்தது கண்டறியப்பட்டது. மேலும் இப்பலகை வாகன பயன்பாட்டிற்கு இடையூறின்றியும், விபத்து ஏற்படாவண்ணம் வலிமையாக இருப்பதும் கண்டறியப்பட்டது. எனினும் பொது மக்களின் கோரிக்கை மற்றும் சமூக அக்கறையின் மீது தனி கவனம் செலுத்தி சாய்வான நிலையில் இருந்த பலகை அகற்றப்பட்டு, சீரமைக்கப்பட்டு சரியான முறையில் மீண்டும் வலுவாகப் பொருத்தப்பட்டுள்ளது என்ற தகவல் மனுதாரர் அவர்களுக்கு 16.06.2023 நாளிட்ட மண்டல அலுவலகக் கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் புகைப்படத்துடன் தங்களின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என குறிப்பிட்டுள்ளார்.

**இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 19.06.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 12.06.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 19.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13, அப்பாவு நகர்-காவேரி நகர் சைதாப்பேட்டை சாலையில் உள்ள வழிகாட்டிப் பலகை மிகவும் ஆபத்தான நிலையில் உயிருக்கு அச்சுறுத்தலாக சாய்ந்துள்ளது. இதனால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமத்திற்குள்ளானது மட்டுமல்லாமல் ஒருசில விபத்துக்களும் அங்கு ஏற்பட்டுள்ளது என தெரிவித்து இம்முறை மன்றத்திற்கு என்னால் புகார் மனு அளிக்கப்பட்டிருந்தது. இம்முறை மன்றத்திற்கு என்னால் புகார் அனுப்பப்பட்ட பின்னர்தான் மேற்கண்ட வழிகாட்டிப் பலகை சரிசெய்யப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்து இதுபோன்ற புகார் மனுக்களின் மீது உடனுக்குடன் தேவையான நடவடிக்கைகளை மாநகராட்சியில் மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13–ன் செயற்பொறியாளர் 19.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13, பகுதி 40, சைதாப்பேட்டை காவேரி நகர் சாலையில் வைக்கப்பட்டிருந்த வழிகாட்டிப் பலகை சாய்ந்துள்ளது குறித்து மனுதாரர் புகார் மனு அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்கண்ட வழிகாட்டிப் பலகை கடந்த 16.6.2023 அன்று சரிசெய்யப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்து, அதன் புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மண்டலம் -13ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. .பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

சென்னை தி. நகரை சேர்ந்த திரு. B. சரவணன், சைதாப்பேட்டை, 70 அடி சாலையில் வழிகாட்டி பலகை மிகவும் சாய்ந்த நிலையில் வாகன ஓட்டிகளின் உயிருக்கு அச்சுறுத்தும் வகையில் உள்ளது எனவும், இதுகுறித்து புகார் மனு அளித்ததும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13ன்

அலுவலர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென தெரிவித்து, உரிய விசாரணை மேற்கொண்டு ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டவாறு, சைதாப்பேட்டை 70 அடி சாலையில் பொருத்தப்பட்ட வழிகாட்டி பலகை சாய்வாக உள்ளது என அறியமுடிகிறது. மேற்குறிப்பிட்ட வழிகாட்டி பலகை வாகன ஓட்டிகளுக்கு இடையூறு இல்லாமல் சரிசெய்யப்பட்டுள்ளது என்பதை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13ன் செயற்பொறியாளரின் 16.6.2023 நாளிட்ட அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறியமுடிகிறது.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 13ன் கள பணியாளர்கள், இம்மாதிரியான ஆபத்தான வகையில் இருக்கும் வழிகாட்டி பலகை, விளம்பர பலகை மற்றும் விழும் நிலையில் உள்ள தெருவோர மரங்கள் ஆகியவற்றை கண்காணித்து அவற்றை உடனே சரிசெய்ய அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 13ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், உடனே சரிசெய்ய கூடிய குறைகளை சுட்டிகாட்டி பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க காலமுறை கூட்டங்கள் நடத்தி பொது மக்களின் குறைகளை உடனுக்குடன் சரி செய்வதை உறுதி செய்திடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது.**

2023–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. B. சரவணன்,
   எண்.1, புது தெரு,
   (கண்ணம்மா பேட்டை)
   தி.நகர், சென்னை – 600 017.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை,
   சென்னை – 600 003.
3. மண்டல அலுவலர்,
   மண்டலம் - 13, பெருநகர சென்னை மாநகராட்சி,
   115 டாக்டர் முத்துலெட்சுமி சாலை,
   அடையார், சென்னை – 600 020.
4. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

22/6/23
உதவிப் பதிவாளர்.